உ

குகமயம்.

குருவடியே துணை.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

சிரீலசிரி

ஐயா

# சுவாமிநாத பண்டிதரவர்கள்

ஈற்றுக்கிரியை வைபவத்தைத்தொடர்ந்துஇயற்றிய

## சரித்திரச்சுருக்கமும், செய்யுட்களும்.

மாணாக்கன்

திருச்செந்தூர் திருப்புகழ்

விநாயக ஓதுவாரால்

எழுதப்பட்டு வெளிவந்தது.

ஸ்ரீமுக தைமீ அ௳ (21—1—1934)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்.

குருவடியே துணை.

# யாழ்ப்பாணம் வண்ணமார்பண்ணை

## சிரிலசிரி

# ஐயா சுவாமிநாதபண்டிதரவர்கள்

## சரித்திரச் சுருக்கம்.

யா,

கடல்புடை சூழ்ந்த நிலமகட்கு, ஆவியுங்கண்ணும் போற்று
பும் போன்றுளதாயும், நீர் வளத்தானை: வாழைகள், கரும்புகள்
ங்குகள், கமுகுகள் பலாக்கள்முதலிய தருக்கள் செறிந்த
லைகள் பெரும் பயன்களைத்தரவும்; சந்தனம், தேக்கு, அயில்
வதாரம், நாங்கு கோங்கு, கருங்காலி, தோதகத்தி, ஆகினி
ங்குமம், முதற்பல தருக்கள் எயிலென வளர்ந்துள்ளதும்; இனி
ரளி,பிச்சி,ரோஜா,இருவாட்சி,குடைமல்லிகை,ராசமல்லிகை,அடு
மல்லிகை பவழமல்லிகைவெட்டிவேர்,மருக்கொழுந்து, கருவூம
த,வெள்ளெருக்கு, செறுந்தி, கூவிளம் இவைகள் நிறைந்த நந்த
வனங்கள் மிகுந்துள்ளதாயும்: தடாகங்கள், கூவல்கள்,செங்கழு
ஓடைகள், முதலான நீர்நிலைகள் நெருங்கியுள்ளனவாயும்; இவ்
ர்மேதாறும் மும்மாரிபொழிவனவாயும்; அதன்பயனால்தானியாதி
ர் வருடமொன்றுக்கு போகம் மூன்று விளைந்து செழித்தோங்
கல் பற்றியே தரித்திரமெனுஞ்சொல் தரித்திரப்படுங்காரணத்
ன், பசிப்பிணி இன்னதென அறியாமலும், வெள்ளங்களினு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும்; மழைகள் மிகுதியினாலும், பெருங்காற்றிடி முதலான உற்பாதங்கள் என்றென்றுமின்னாட்டிற்கில்லாமலும், கொலை, களவு, முதலைத்தும் அறக்கடிந்தும், மரஞ்செடி கொடிகளான ஓரறிவின் உயிர்களுங்கூட, வாடுதல் உதிர்தல், வெட்டுதலின்றிச் செழித்தோங்கவும், சிங்கமும் யானையும், புலியும்பசுவும், நாயுங்குரங்கும் பூனையுமெலியும், காகமுங்கூகையும், கருடனும்பாம்பும், முதலான விரோத பிராணிகளும் ஒத்துவாழவும்; பள்ளிக்கூடங்கள், வித்தியாசாலைகள், சாதுசங்கங்கள்; வேதக்கழகங்கள், திருக்கோணமலை கதிர்காமம் முதலான புண்ணியதலங்களைத் தம்முள்பெற்றதும்; தற்கம், வியாகர்ணம், மீமாம்சம் முதலிய ஆராய்ச்சியாளரும் பற்பல உளவாகக்கொண்டும், வீணைநாதசுரம், மத்தளம், பரதநாட்டிய மோங்கும்ஒலிகளும் இடைவிடாது முழங்கவும்; ஆதிசைவ மறையோர்கள் வீதிகளும், அந்தணர்கள் வீதிகளும், சத்திரியர்கள் வீதிகளும், வைசியர்கள் வீதிகளும், கங்கைதன் மரபிற்றோன்றும் சைவ வேளாளர்கள் தம்மைக்கொண்டும் தாமேவிற்றும் தருமஞ்செய்கின்ற வீதிகளும், சூத்திரர்கள் நிறைந்த ஆவண வீதிகளும், மாடங்கள், உப்பரிக்கைகள், நிலா முற்றங்களும், கோபுரச்சிகரங்கள் நெருங்கியுள்ளனவாயும் குதிரைப்பந்தியானைப் பந்தி தேரணிகள் அனுப்பு மண்டபம் நிருத்தமண்டபம் மாமண்டபம், கெற்பகரங்கள்முதலிய அமைந்துள்ளதும்தபோதனர்கள்மெய்ப்பொருளுணர்ந்து வாழும்படியான மடாலயங்கள் நிறம்பப்பெற்றதாயுள்ள ஈழநாட்டின்கண் வண்ணமார்பண்ணை என்னுநகரத்தில், சைவவேளாளர் மரபினிற்றோன்றி சைவசமயத்தழுந்துதலால், விபூதி, அக்குவடம் சிரி பஞ்சாக்ரசிவம், சைவானுட்டானம் முதலிய சிவபூசையினும் கொடை, தயை, அருள் நிறம்பியும் சுற்றந்தழுவல், கண்ணோட்டம் வைத்தல், பழமைபாராட்டல், முதலான: நற்குண நல்லொழுக்கந்தலைக்கொண்ட சிரிமான் சின்னத்தம்பியாபிள்ளையவர்கள் மாதவத்தின் பேற்றால், எங்காடுஞ் சைவமோங்கி பரமுத்தி அடைந்து ஆன்மாக்கள் நித்தியானந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தை அடைய வெண்ணி தாமும் தனது மனைவி விரதசீலியார்மணி
வயிற்றில் இறைவனருளால், கன்மாசம், நன்னச்சத்திரம், நற்றிதி
நல்லோரையில், கலைமகள் பயன்பெற, சைவஞ்செயம்பெற, ஐங்
தெழுத்து நீறு, கண்டிகை நிலைபெற, உயிர்கள் பதம் பெற
அந்நாட்டினர் இன்பம்பெற போற்றித் துதிக்குமாறு வலம் புரிச்
சங்கு ஓர் நன்முத்தை ஈன்றாற்போல் ஓர்புத்திரனைப்பெற்றேந்தி
னார்கள். அப்புதல்வருக்கு சுவாமிநாதனென்றும், அருமைத்திரு
நாமம் தம்பையாவெனவும், நாமகரணஞ்சூட்டியும்; புத்திரப்பேறு
அடைந்தார்செய்யுஞ் சடங்கத்தனையும் புரிந்தும், அன்னையர்மடி
மீதும், தந்தையார்தோழ்மீதும். தொட்டிலிலும் உரியார் தமமேவ
தாலாட்டி, பூக்காட்டி, நிலாக்காட்டி, சீராட்டி, பாராட்டி வளர்க்கு
ந்நாட்களிலே, அன்னை பாலருந்துந்தோறும், சிவஞானமுபதேசி
க்கச்சித்திபெற்ற குழந்தைக்கு, ஐந்தாண்டின் பள்ளிக்கு வைத்து
படித்து வருங் காலங்களிலும், நல்லொழுக்கம் சிவசின்னத்
தோடும் ஆசானுக்கு விதிமுறை கொண்டு நாடோறும் வணங்கி,
அரிய, சிறிய பருவத்திலும் குரவர்பால் விடைபெற்று பள்ளிக்
கூடத்தின் படிப்பு முற்றியபின் "பாடை ஏறினும் ஏடைவிடேல்,"
என்பதையும், "கற்ககசடற," என்பதையும், "கற்கைநன்றே.
கற்கைநன்றே," எனவரும் வாக்கியங்களைக் கைப்பற்றி, புத்தகங்
களுங்கைகளுமாக வளருங்காலத்து, தென்மலைமுனிவனைத்தேடி
யுங்காண்கிலேம். அவனிவனென்றே அறிவுளார் போற்றும்
சிரிலசிறி நாவலர்பெருமான் மருகரும், மாணாக்கருமான கொத்
தாரிசு பொன்னையாபிள்ளை யென்ற பெருந்தகையார்பால் இலக்கிய
இலக்கணங்களும், சங்கநூல்கள் முற்றும், சைவசித்தாந்த திரா
விட மாபாடிய முதற் பதினொன்றும், இதிகாச புராணங்களும்,
பிரமதக்கண்டன உணர்ச்சிகளும், வாரிக்கொள்ளை கொண்டும்,
அபகரித்தலையுங்கண்டு, அந்நாட்டார் மிகத்தாழ்ந்து போற்ற, புகழ்
வான்வரை ஏறுங்காலத்து, தமது தந்தையாம் சின்னத்தம்பியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையவர்கள், தான்மகனைப்பெற்ற பயன் பெறக்காந்தி, அறனடி அடையவும், சிவநாட்டிற்பட அன்னையர், தம்பதிவழியே சிவனடி சேரவும், "பெண்ணின் பெருந்தக்கயாவுள வெனும்," வாக்கியத் திற்கிணங்கியும், தாலியும் மகப்பேறுமற்ற,ஏகச்சகோதரியார்பாது காப்பில் கைட்டிகபிரமச்சாரி விரதங் கடைப்பிடித்து ஒழுகும் ஐயா அவர்கள் சுமக்களித்தார்க்குரிய கடமைகள் ஒரு சிறிதுங் கோடாதவர்களாய் புரிந்து வருங்காலத்து, இந்தியாவில் தென் னுட்டில், பாடல்பெற்ற சிவத்தலங்கள் தரிசிக்கவேண்டி விசயஞ் செய்துவரும் வழியில், தலைவைசியராம் செட்டிநாட்டுள் எவ்வள னும் பொருந்திய அமராவதிபுதூர் வெங்கடாசலஞ் செட்டியார் அவர்கட்கு முறைபடி கல்வி முற்றச்செய்தும்,சிலநாளங்கிருந்தும், மேல்படியாரால் அளப்பெருந்நிதிகள் அளிக்கப்பெற்று.அநேகபிர பந்தங்களும், தேவார அடங்கன் முறைப்புத்தகங்களும்,சிவஞான யோகிகள் வாய்மலர்ந்தருளிய சிவஞான போதமாபாடியங்கள் அச் சிட; நிதியின்கணக்கும், முயற்சியால் நேர்ந்துள்ள இன்னல்களின் கணக்கினையுஞ் சேடன் வினவவாய் கூசுவன்என்பது உண்மையே சிதம்பரத்தில் சைவசித்தாந்தப்பாடசாலை அமைத்தோங்கவும், பாண்டிநாட்டின் சிரலைவாய் என்னுந் திருச்செந்தூரின்கண், சுப கிருது வருடம், அர்ப்பிசி மீ 7 ஆம்நாள் புதவாரத்தன்று, சுப்பிர மணியவித்தியாசாலை தாபனஞ் செய்தும், தமிழ், திருநீறு,உருத்தி ராக்கம், இலக்கண இலக்கியம், புராண சாத்திரங்களை,சுமார் 30 பேர்கள் வரையும் படிப்பித்தும், பெருநிதி சிலவளித்து மாடக்களோங்க, கல்லூரிக்குரிய வழியான கட்டிட மாடங்கள், கட்டுவித்தும்: படித்து வித்துவான்களாய் ஆனவர்களன்றியும், இனிவரவேண்டும் மாணவர்கட்கு படிப்பிக்கிற உபாத்திமார்கள் குடியிருப்புக்காகவும், பின்னிலத்தில் நந்தனவனமாக்கி, அம்மலர் களைப் பெருமானுக்குத்திருமாலை கட்டிச் சாத்தஉள்ளங்கொண்டு, வேண்டியமனை, தற்காலத்தும் விலைபெறுமதியாக வேண்டிவைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங் குறித்தகாரியங்கள் இவ்வூரில் தாபனஞ்செய்வித்து இடை இடையே சிதம்பரம், திருவண்ணாமலை, திருவாரூர், திருவையாறு, சீர்காழி, காசி, காஞ்சி முதலானயாத்திரைகள் மீண்டும் மீண்டுஞ் செய்து கொண்டு, திருச்செந்தின்மாநகரத்து அமர்ந்திருக்குங் காலத்து சிதம்பரத் திருநடனத்தின் ஒடுங்குதலை உன்னதபதவி யென பன்முறையும் வாய்மலர்ந்தருளக்கேட்டிருக்கும் மாணவர் கட்கு, 1109-ளு அற்பசிமீ, கந்தசட்டியில், தனிகர்கள், தொண் டர்குழாங்கள், மாணவர்கள் சூழ்ந்திருக்கவும், ஐயா அவர்கள் கந்தபுராணம்படித்து விரித்துரை கூறியுங், திருக்கலியாணப்படிப் பைமுடித்துஞ், சிலநாள் செல்ல வழக்கம்போல், அருணைக்கார்த் திகைக்கும், சிதம்பரத் திருவாதிரைக்கும் தரிசித்து, தைபிறந்தவு டன் செந்தூருக்கு வருவேனெனச்சென்ற சிரிலசிரி ஐயாசுவாமி நாதபண்டித சிரோன்மணியவர்கள் தீபஉற்சவந்தரிசித்தும்சிதம்ப ரம் ஆதிரைநாள் தரிசித்தும் சுமார் வாரம் ஒன்றுக்குள்சிதம்பரத் தில் தெற்குரதவீதியில்,தன்னால் பதிட்டைசெய்தருளிய சைவசித் தாந்தபாடசாலையின்கண்,பண்டுதொட்டு அன்றும்இன்றும்என்றும் உயிர்த்துணை பண்டிதரவர்கள் கொண்டிருக்கும் மதுரை திருஞா னசம்பந்த சுவாமிகள் மடாலயம் மகாசன்னிதானத்தின் பணிகட வாமலும் சோமசுந்தரப்பெருமான் தொண்டுமறவாமலும்பண்டித ரவர்களிடம் அன்புகடவாமலிருக்கின்ற சிரிலசிரி மாணிக்கவாசக சுவாமிகளும் பெருந்தோட்டம் கனம் முருகேசபிள்ளை அவர் களும் பெரும்பயனை அடைந்தும் இனி எதிர்நோக்குஞ் சீடனும் சிரிமான் வெங்கடாசலஞ் செட்டியாரவர்களும் அருகிருக்கதேவா ரப்பாடசாலை மாணவர்களால் தேவார ஒலிஒங்க சூக்கும பஞ்சாக் கர செபஞ்செய்யவும் தனிகர் அனைவருஞ் சூழவும் சனசமூக பெருக்கத்தின் தலைக்குத் தாமே விபூதி அபிடேகஞ் செய்வித்துக் கொண்டும் உருத்திராக்கமாலை சிரம்பத்தரித்தும் இரண்டுகரமுஞ் சென்னிமீது குவித்தும்அரகரவென்னும் ஒலி கடலடங்கவும் விண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணோர்கள் மன்னோர்கள் வாழ்த்தொலியெடுப்ப மாணவர்கள் ஆசிரியர் பெருமான் பெறப்போகின்ற பெரும்பேற்றை எண்ணித்துதிக்கவும் தில்லைமூவாயிரவருள் உண்மையறிந்த நிச்சதசுவாமி அவர்களும் சூழ்ந்திருக்கும் அமயம், 1109-ஞ மார்கழிமீ 23உ திர வாரம். பூரநச்சத்திரம், சட்டிதிதியில், கனகசபையின் சிவகாமவல்லியார், பதஞ்சலி, வியாக்கிரர் துதிக்க, ஆடிய நடராசப்பெருமானது குஞ்சிதபாதத்தில் இரண்டறக்கலந்து பேரானந்தப் பெருவாழ்வை அடைந்தார்கள்.

அதுபற்றிவரும் செய்யுட்கள்:—

கன்னலுங் கதலித்தெங்குங் கமுகோடு பலாவின் சோலை
பொன்னவ யிருந்துவாழ பொருந்திய விழநாட்டின்
துன்னலர் துதிக்கவோங்குந் தோன்றலாஞ் சினனத்தம்பி
இன்னிலச் சைவமோங்க வீன்றனன் றம்பையாலே 1

அன்னை முலைப்பாலருந்த வுண்ணும்போது
மலைநுமைத்த சிவஞான வருளை நோக்கி
சொன்னமொழி வழியொழுகிச் சொல்லைந்தாண்டின்
சோர்வின்றிப் பள்ளியுள்ள படிப்புமுற்றி
முன்னையுள்ள அகத்தியனினென்றிபாரும்
மொழிகின்ற முத்தமிழின் மூவாக்கிர்த்திப்
பொன்னையா கொத்தாரி சென்யான்பாலே
பொருள்நிறைந்த கல்விகளை புகுந்துவாரி. 2

அன்னிலமதிக்குமாறநும் புகழுயரவேற்றி
சின்னங்கடரித்து நால்வர் செழுந்தமிழ்மறைகள்பாட
துன்னியவாலயங்க டொழுதிட வுள்ளங்கொண்டு
மன்னினஞ்சாமிநாதன் மகிழ்ந்தன னிந்தியாவே. 3

காடினைக் கடந்தகாற்றுக் கசடாசம் மதங்கள்மேட்டை
அடர்ந்திடக் கிள்ளிவீசி அங்கெங்கும் நீறதாக்கி
தொடர்ந்திடு மக்கமாலை தாக்கியே கழுத்திற்போட்டு
[illegible] 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரீமுகவருட மார்கழித்திங்கள் சேர்சனி சட்டியாம்பூரம்
அரியயற் கரியானடிய தில்லை யவனடியன்றி மற்றெல்லாம்
புரிபவமென்றே புறக்க நீக்கப்போற்றிடு மைக்கொழுந்தோதி
கரிந்திடாக் கஞ்சங் காட்டிடப் புகுந்தான் கருணைசேர்
[சுவாமிநாதனே. 5

நீயிருக்குங் காலத்தஞ் சைவம்வாடி
நிலைபுரம்பரை யாலயத்துட் செல்ல
வாயிருக்கும் படிபேசி வலுவினாலே
வாழ்விழந்த விதவைமணம் வழங்கக்கண்டும்
போயிருந்து உண்மையுள்ளார் விலைவிற்சென்னை
போதுகின்ற ஞானத்துட் புலம்பவிட்டாய்
தாயிறந்து தவிக்கின்ற குழவியேபோல்
தவிக்கின்றேன் தவிக்கின்றேன் தவிக்கின்றேனே 6

நிதிபலவளித்தால் பொன்று நிறைபணி விற்பாரில்லாம்
பதிபலவளித்தால் காற்று பருமழை யிடியுண்டென்று
கதிசிறிதுணர்ந்திடாத கடையனேன் கருத்திலுன்ற
பதிப்பொருளுணர்த்துமொர்தாய்ப் பார்த்திட லொளிக்கலாமோ

அப்பர்முதல் நால்வர்களும் அழைக்கச்சென்று
அவருரைத்த அருந்தமிழ்க்கு அருத்தஞ் சொல்ல
ஒப்பரிய விண்ணவரும் முனிவர்யாரும்
உவந்துசென்னி ஒருங்கசைத்து முருகுங்கன்னீர்
தெய்வத்தில் மிதக்கவிட்ட சாமிநாதா
திருவடியை மாணவர்கள் தேடுங்கால்
தப்பித்தோடுவது தருமமாமா
தகாதிது தகாதிது தகாது தானே. 8

அன்னியசமய மானவைகண்டவாய்ப் பேய்களுப்பன்
சின்மய வடிவா மெங்கள் சிவநெறி சிக்கிக்கொள்ளத்
தன்னியே விழுக்குப்போத நீயநீ செல்வாயானால்
எண்ணினிச்சை வழிந்தே யென்படா தென்செய்வேனே. 9

இன்னியு முனிவர்தேவர் நிலத்துளார் துதிக்கக்கேட்டும்
தன்னவ னொருவன்மட்டுந் தருவ தென்னவென்றால்
முன்னவன் வடத்திருந்த மோனத்தைத் தவிர்த்தவாவி
தன்கரமிருக்குந் தோற்ற தளர்ச்சியால் வெகுளிகொண்டே.
சொற்கண்டும் பொருள்கண்டுஞ் சுவைகள்கண்டுஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்கண்டு மெனைப்பிடித்துக் கல்விதந்து
பன்னாசனைவையேற்றி வைத்து மகிழ்வுகண்ட
பொற்குன்றே யென்குருவே சுவாமிநாதா
புலம்பினேன் காரணத்தை புகலவென்றாற்
கற்கண்டு கவர்ந்தருசி கண்டகாயுங்
கால்வழைந்தே யகலாத கதைகாண்பிரே. 10

மாணவர் மாசிலாமல் மருவிய குளாத்திலென்னை
காணவே கருப்பிணாடே கனுவென வெறுத்தல் கண்டும்
நாணயக்கல்விதந்த நாயகன் சாமிநாதன்
கோணலைக்கண்டென் மீதிற் கோவித்துச் சென்றான்போலும் 11

பாடியநீறுகன்டி பவித்திரம் புலித்தோலெங்கே
தேடிநீ கிளிபோல்வைத்து திருத்திடு மேடுதானெங்கே
சாடிய சமயத்தார்க்குச் சண்டப் பிரசண்ட மெல்லாம்
மூடியேசிவன்பாற் செல்ல முழிக்கின்றோ முழிக்கின்றோமே 12

குருந்தமரத்தடியிருந்துங் குழாங்கள் சூழ
கோதற்ற வெண்ணீ ரக்கமாலை
அருந்துமடியார்க்கு சிவஞானபோத
மருள்வடிவா யிருந்தளித்த தறைந்தார் நூலோர்
பருவமுள்ள மணிவாசகர்க்கேயன்றி
பாரிலெம்மைப்போன்றார்க்குப் பகரக்காணோம்
அருந்தவமே யுனைக்கண் டார்வந்தாலு
மருட்கடலிற் படியவிட்டகலலாமோ 13

மூலைதருமன்னை தந்தை மொய்குழல்மனவிமக்கள்
தலைவிரித்தழுதலிந்தத்தரணியிற் காண்பதல்லால்
கலைமுழுதுணர்ந்துதில்லைக் கழலிணை சேர்தலுன்னி
வலைபடுமான் போற்சிடர்வருந்தினேஞ்சாமிநாதா. 14

இன்னிசைகுறற் கிறங்கி எண்ணி நான்றேடுவேனே
பன்னியமாற்றங்கேட்டு பதறினன்றேடுவேனே
அன்னியசமயத்தார்க ளகன்றிடதுரந்தலுந்தன்
உன்னித சைவப்பக்திக் குருகுகேசாமிநாதா. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாளின் மணமுடிக்க மக்கள் பெற்றால்
முன்னூறாண்டிருந்த பொழிவார் நின்பே
ரின்னாளி லெத்தனையூர்சிட்டர்தேடிப் பிம்பு கின்ற
றொன்றுமம் இறைவா நாயேன்
பன்னாளிலுன்னுசோர் வஸ்திரங்கள் பாவிக்குமடிமைக்
[காற் பயன்வேருண்டோ
பொன்னாரும் திருமேனி சுவாமிநாதா புகழ்பேசபூவுலகில்
[புலவர்யாரே 16

வங்காளஞ் சிங்கப்பூர் சீனத்தாரும் வளர்பாண்டிநாட்டாருந்
[சோணாட்டாருந்
கங்கைநதிதீரத்தார் தொண்டைநாட்டார் கடற்புரத்தீழத்தார்
[கற்றூர் யாருந்
திங்களைப்போற் சென்றுவரா நீற்றுமேனித்திருமுகத்தைதரிசிக்க
[படித்தோர்வந்துந்
தங்கள்துறையின்றுறைப்பாரெனவேபேசு தனித்தனிபே கண்
[டிருந்தோர் தவிக்கின்றாரே 17

ஈனனென்றுங் கருப்பனென்று மாடனென்றும் மெக்கனையோநா
[மங்க ளிபம்பப்புத்தி
போனவழி பூக்கொண்டு பொங்கலிட்டு போற்றுகின்றார் மறை
[களையும் புகுந்துப்பார்த்தோஞ்
சேனமென உயிர்கவருங்கமன்றனக்கு செய்யார்கள் பூசையென்
[றுஞ் செகத்துள்ளோர்கள்
கானமுறை தமிழ்தந்த சாமிநாதாகவர்ந்துணையுங் கொண்டுசென்
[ற கடுமையாலே 18

பன்றியின் குருளைக்கன்னன் பாலினையளித்தானென்று
ஒன்றியபாடஞ்சொன்ன உத்தமநின்பாலில்லை
மன்றினிலாடுமண்ணால் மலரடிமறந்துசென்றாய்
என்றுநான்காண்பதுன்னை இரங்குவதுணர்ந்திடாமல். 19

பிரமசாரிவிரதம்பூண்ட பேர்கள்ரெண்டு வீட்டுமர்
அரவக்கொடியனருகிருக்கு மாருயிர் துலைத்தலால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவச்சிலமில்லையென்று பாரிலுள்ளோர் தூற்றுவர்
கரவிலாதுமுடிவுகண்ட கருணைசாமிநாதனே. 20

கருவினிலிருந்துகாக்குங் கடவுளாமொருவன்கஞ்சத்
திருவடி யருளேவாழி திருந்தநீறடியார்வாழி
பொருந்திடச் சாமிநாதன் புரிந்திடுமரங்கள் வாழி
செறிந்திடுஞ் சீடர்யாருஞ் செகமெலாம் வாழி வாழி. 21

அடைந்தார்கள் அடியையும் பொருளளித்து, அவர்கள் தாபித்ததருமங்களையும், கலிவுறுவண்ணம் நடத்திவரும் திருச்செந்தூர் மேலக்கோபுரவாயில் திருப்பணி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக சுவாமி அவர்கள் திருவடிகட்கும், சோழநாட்டின் பெருந்தோட்டம் ஸ்ரீமான் முருகேசபிள்ளை அவர்கட்கும் தனவைசியர் நாட்டின் அமராபதி புதூர் அழகேசனுக்தநிதியும், அவைக்கமைந்த குணமும் நிரம்பிய ஸ்ரீமான் வெங்கடாசலஞ் செட்டியாரவர்கட்கும் என்றென்றும் நன்றிபாராட்டக்கடமையையுடையேன்.

மாணாக்கன்

**திருச்செந்தூர் திருப்புகழ் விநாயக ஓதுவான்.**

சுபம். சுபம். சுபம்.

ஆரியப்பிரகாசினி பிரஸ், திருச்செந்தூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org